(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 2(16).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 டிசம்பர் 13 புதன்கிழமை வெளியிடப்பட்டது

## 2024 சனவரி 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1464/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது அச்சங்கங்களில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஆகக் கூடிய மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டுள்ள மாவட்டம் யாதென்பதையும்;

(iv) மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1512/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் அரச நிறுவனங்களில் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களில் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அரசாங்க நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் வாடகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1550/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் கறுவா செய்கையாளர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள கறுவா கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) கறுவா செய்கையாளரொருவருக்கு வழங்கப்பட்டுள்ள கறுவா கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி கறுவா கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கறுவா கன்றுகளுக்கு மேலதிகமாக கறுவா செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் இதர வசதிகள் யாவை என்பதையும்;

(ii) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கறுவா செய்கையை ஊக்குவிப்பதற்கு செலவிடப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1586/2023

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அடிக்கடி வெள்ள நிலைமை ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) வருடத்திற்கு இரண்டு மூன்று தடவைகள் வெள்ளத்தில் மூழ்கும் பிரதேசங்கள் அம்மாவட்டத்தில் உள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக பின்பற்றப்படும் வழிமுறை யாது;

(ii) மேற்படி மாவட்டத்தில் வெள்ளக் கட்டுப்பாட்டிற்காக இன்றளவில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவை;

(iii) மேற்படி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1625/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள 1556 முறைப்பாடுகளில் 2020 திசெம்பர் 31ஆம் திகதியளவில் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை; விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை; வாபஸ் பெறப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் கூப்பிடப்படவுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட ரீதியாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) அதிகார சபைக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் துரிதமாக விசாரணை செய்து அவற்றுக்குத் தீர்வுகளை வழங்க முடியாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அதிகார சபைக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரணை செய்து, அவற்றுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கு அதிக காலமெடுக்கப்படுவதைத் தவிர்ப்பதன் பொருட்டு பொருத்தமான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1645/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பணியாற்றுகின்ற மோட்டார் வாகனப் பரிசோதகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை விபத்துக்குள்ளான வாகனங்களைப் பரிசோதித்து அவர்களால் வழங்கப்பட்டுள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) பெரும்பாலான விபத்துகள் இடம் பெறுவதற்கான அடிப்படைக் காரணங்கள் அடையாளங் காணப்பட்டு அவை தொடர்பிலான பரிந்துரைகள் மேற்படி பரிசோதனை அறிக்கைகளில் முன்வைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பரிந்துரைகள், கொள்கைகளாகத் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1688/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா – செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையில் 8,614 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 28,201 நபர்கள் வைத்திய சேவைகளைப் பெறுகின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால் சுகாதார சேவைகளைப் பெறுவதற்காக மேற்படி மக்கள் சுமார் 40 கி.மீ. தொலைவிலுள்ள வவுனியா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியேற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையில் இலக்கம் 1,2,3,4,5 மற்றும் 6 ஆகிய வாட்டுகள் உள்ள கட்டிடங்கள், ஆய்வுகூட மற்றும் கிளினிக் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கட்டிடம் மிகவும் பழையவை என்பதையும்;

(ii) செட்டிக்குளம் வைத்தியசாலையில் பிரேத அறையொன்று உள்ள போதிலும் அங்கு சட்ட வைத்திய அதிகாரியோ திடீர் மரண விசாரணை அதிகாரியோ இல்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக பிரேத பரிசோதனைகளுக்காக பிரேதங்களை வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டியேற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், மேற்படி (ஆ)(i) இல் குறிப்பிடப்பட்ட கட்டடங்களை மறுசீரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய அதிகாரி ஒருவரையும் மரண விசாரணை அதிகாரி ஒருவரையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1766/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அரசாங்க விதைப் பண்ணைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற விதை வகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நாட்டுக்கு விதை வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இறக்குமதி செய்யப்படுகின்ற விதை வகைகள் யாவை என்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை விதை வகைகளை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2397/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க நெசவுக் கைத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) நெசவு உற்பத்திகள் பின்னடைந்துள்ளமையை ஏற்றுக்கொள்வாரா;

(iv) நெசவு உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2552/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 60 வயதைப் பூர்த்தி செய்ததன் அடிப்படையில் 2022.12.31 ஆம் திகதியில் ஓய்வுபெறச் செய்யப்பட்ட அரசாங்க ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர்களை ஒரே தடவையில் ஓய்வுபெறச் செய்ததன் காரணமாக அரசாங்க பாடசாலை முறைமை செயலிழக்கும் அபாயம் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்கூறப்பட்டவாறு ஓய்வுபெறச் செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 01 ஆம் திகதிய 2334/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கடற்றொழில் அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட சீ நோர் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட சீ நோர் நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.22 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில்துறை கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் கீழ் 2022.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.22 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 2023.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.07.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

சவீர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2024, சனவரி 09, செவ்வாய்க்கிழமை)**

1519/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை வெளிநாடு சென்றுள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஊழியர்களில் உயர் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் மாநாடுகள் / பயிற்சிச் செயலமர்வுகளுக்காக வெளிநாடு சென்றுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது;

(iii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை உயர் கல்வி நடவடிக்கைகள் / மாநாடுகள்/ பயிற்சிச் செயலமர்வுகளுக்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப தனித்தனியே யாது;

(iv) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் உயர் கல்வி நடவடிக்கைகள் / மாநாடுகள் / பயிற்சிச் செயலமர்வுகளுக்காக குறிப்பிட்ட அதிகாரசபைக்குக் கிடைக்கப் பெற்றுள்ள வெளிநாட்டு நிதியின் அளவு ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப தனித்தனியே யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3177/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரசாயனப் பசளை தடை செய்யப்பட்டு சேதனப் பசளை அறிமுகப்படுத்தப்பட்ட வருடத்துக்கு முந்தைய, ஐந்து ஆண்டு காலத்துக்கான இலங்கையின் வருடாந்த தேங்காய் அறுவடையும் அக்காலப் பகுதியில் அரசாங்கம் தெங்குச் செய்கையாளர்களுக்கு வழங்கிய பசளையின் அளவும் ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப் பகுதியில் தெங்குச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சேதனப் பசளை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டிலிருந்து இது வரை வருடாந்த தேங்காய் அறுவடையும் அக் காலப் பகுதியில் தெங்குச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட பசளையின் அளவும் ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் தெங்குச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இரசாயனப் பசளை தடை செய்யப்படுவதற்கு முன்னரும் அதன் பின்னரும் தேங்காய் உற்பத்தியின் அதிகரிப்பு/வீழ்ச்சி சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கையின் தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3675/2023

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் ஓய்வூதியம் பெறுகின்ற சனாதிபதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி சனாதிபதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ள, அரச கொடுப்பனவுகளைப் பெறுகின்ற பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு சனாதிபதியினதும் பாராளுமன்ற உறுப்பினரினதும் பணியாட்டொகுதியினரின் பதவிப் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட சனாதிபதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாதுகாப்புக்காக முப்படை மற்றும் இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு சனாதிபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள முப்படை மற்றும் இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3704/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையானது இலங்கையில் பதவிவகித்த ஒவ்வொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கும் ஏற்ப தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையானது, தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், கல்வி, தேர்தல்கள் மறுசீரமைப்பு மற்றும் ஊழல்களை வெளிகொணர்தல் ஆகிய ஒவ்வொரு விடயத் துறையின் படியும் ஒவ்வொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கு அமைவாகவும் தனித்தனியே எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டவாறு ஆணைக்குழு அறிக்கைகளின் படி வெளிக்கொணரப்பட்ட குற்றவாளிகள் மற்றும் அவர்களுக்கு வழங்குவதற்காக விதப்புரை செய்யப்பட்டுள்ள தண்டனைகள் ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் ஏற்ப தனித்தனியே யாதென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவுக்குமாக செலவிப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்களின் இறுதி அறிக்கைகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பெறக்கூடியதாக உள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இதுவரை இறுதி அறிக்கையொன்றை வெளியிடாத ஆணைக்குழுக்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்ட காலப்பகுதி மற்றும் அவற்றின் உறுப்பினர்கள் தனித்தனியே யாவர் என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3712/2023

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உத்தியோகப்பூர்வ வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்காக இலங்கையிலிருந்து ஒவ்வொரு அமைச்சு, திணைக்களம், சபை, அரச கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட சபை முதலியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பெயர்கள் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகப்பூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்கென மேற்கூறப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் செலவிட்டுள்ள தொகை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டுப் பயணங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மைகள் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) இலங்கையானது பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில் மேற்கண்டவாறு பெருமளவு பணத்தை செலவிட்டு உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3729/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, நிவ் பசார் கிராம அலுவலர் பிரிவில், கொழும்பு 14, கிராண்ட்பாஸ் வீதி, இலக்கம் 180/70 ஜே எனும் இடத்தில் வதியும் திருமதி. பாத்திமா சஹ்ரா என்பவர் 5 வயதுடைய அங்கவீனமுற்ற குழந்தையைக் கொண்டுள்ள குறைந்த வருமானம் பெறுபவராக உள்ள போதிலும் இவருக்கு அஸ்வெசும மாதாந்த நிதியுதவி இதுவரை வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், NH-1-1-03-01-070-00719 எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட விண்ணப்பப்படிவத்திற்குரிய அஸ்வெசும நிதியுதவியை திருமதி. சஹ்ராவிற்கு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3741/2023

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் “ட” அட்டவணைக்கமைய அமைச்சர்களின் பிரத்தியேக பணியாட்டொகுதி செயலாளர்களுக்கும் அமைச்சுகளுக்கான நிரந்தர செயலாளர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளர்களுக்கும் ஓய்வூதியத்திற்கான உரித்து உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி ஓய்வூதியம் பெறுகின்ற மற்றும் அதற்கென விண்ணப்பித்துள்ள எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட செயலாளர்களுக்கு விதவைகள்/ அநாதைகள் ஓய்வூதிய உரித்து மற்றும் ஓய்வூதிய பணிக்கொடை உரித்து வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இணைய வழியூடாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு உரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பது தொடர்பில் அரச நிறுவனங்களிலுள்ள விடயத்துக்குப் பொறுப்பான எழுதுவினைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அது தொடர்பிலான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஓய்வூதியத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரது நேரடித் தொலைபேசி இலக்கம் ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அமைச்சரொருவரின் பிரத்தியேக பணியாட்டொகுதியில் செயலாளராகவும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுச் செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் பணியாற்றிய திரு. சமல் எஸ். பியசுந்தர அவர்களுக்கான ஓய்வூதியம் இதுவரை வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2024 சனவரி 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1818/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் குடிநீர் வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி கிராம மக்களுக்கு சுத்தமான குடிநீர் வசதிகளை வழங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2535/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பொலிஸ் நிலையம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையம் தாபிக்கப்பட்டுள்ள காணியின் உரிமையாளர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிண்ணியா பொலிஸ் நிலையம் நீண்ட காலமாக தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியொன்றில் பேணிவரப்படுவதன் காரணமாக இப் பொலிஸ் நிலையத்திற்கென நிரந்தரக் கட்டிடமொன்றை நிர்மாணிக்க முடியாமற் போயுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பொலிஸ் நிலையத்திற்காக அரச காணியொன்றையும் நிரந்தரக் கட்டிடமொன்றையும் பெற்றுக்கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2582/2023

கௌரவ டீ. வீரசிங்க,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “அபே கம” நிறுவனத்தின் பணிப் பொறுப்பு இன்றளவில் உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றதா என்பதையும்;

(ii) அந்நிறுவனத்தின் சேவைகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அந்நிறுவனத்தின் பராமரிப்புப் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iv) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அந்நிறுவனம் ஈட்டியுள்ள வருமானம் எவ்வளவு என்பதையும்;

(v) அந்நிறுவனத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2624/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கை முதலீட்டுச் சபையில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3239/2023

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அவற்றுள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காணிகளுக்கான உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், 2021 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை குடியிருப்பாளர்கள் மற்றும் பயிர்ச்செய்கையாளர்களுக்கு உறுதிகள் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஏக்கர்களிலும் உறுதிகளின் எண்ணிக்கை வெவ்வேறாகவும் யாவையென்பதையும்;

(v) இன்றளவில் உறுதிகள் வழங்கப்படாத காணிகளுக்கு எதிர்காலத்தில் உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 சனவரி 11, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2851/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மீன் அறுவடை அதிகமாக கிடைக்கும் காலப்பகுதிகளில் குறித்த அறுவடையை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் மீன் அறுவடையை களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சிய வசதிகள் உள்ளனவா என்பதையும்;

(iii) மீன் அறுவடை குறைவாகக் கிடைக்கும் பருவம் தவறிய காலப்பகுதிகளில், நுகர்வோருக்கு நிவாரண விலைக்கு மீன் வழங்குவதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(iv) கடற்றொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினரையும் பாதுகாப்பதற்காக நடைமுறைப்படுத்தக்கூடிய முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2976/2023

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க வைத்தியசாலைகள் சிலவற்றில் ஒருசில மருந்து வகைகள் இல்லாத சந்தர்ப்பங்களும் போதியளவில் இருப்புகள் இல்லாத சந்தர்ப்பங்களும் பதிவாகியுள்ளன என்பதையும்;

(ii) அதன் காரணமாக நோயாளர்கள் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மருந்துகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) பல்வேறு சந்தர்ப்பங்களில், அரசாங்க வைத்தியசாலைகளில் ஒருசில மருந்துவகைகளின் பற்றாக்குறை ஏற்படுவதன் மீது தாக்கம் செலுத்தியுள்ள காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3081/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் யாது என்பதையும்;

(ii) சபையின் பேருந்துத் தொகுதி நாளாந்தம் சேவையில் ஈடுபடும் தூரத்தின் அளவு கிலோ மீற்றரில் யாது என்பதையும்;

(iii) அதற்கான நாளாந்த எரிபொருள் தேவை யாது என்பதையும்;

(iv) மேற்படி எரிபொருளுக்கு செலவாகும் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3157/2023

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளை வழங்கும் திட்டத்தின்கீழ் பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தினால் இன்றளவில் ஆட்சேர்க்கப் பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி தொழில்பெறுநர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் பதவிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி தொழில்பெறுநர்களில் இன்றளவில் சேவையில் நிரந்தரமாக்கப் பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இன்றளவில் சேவையில் நிரந்தரமாக்கப்படாத தொழில்பெறுநர்களை, நிரந்தரமாக்குவதற்காக நடைமுறையிலுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(v) மேற்படி தொழில்பெறுநர்களுக்காக பதவியுயர்வு முறையியல் மற்றும் நலன்புரித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3579/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்தியாவிலிருந்து இலங்கை வரை எண்ணெய்க் குழாயொன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தீர்மானத்தை மேற்கொள்வதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி எண்ணெய்க் குழாயை அமைப்பதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி எண்ணெய்க் குழாயை அமைப்பதன் மூலம் இலங்கையின் வலுசக்தித் துறைக்கு ஏற்படும் பாதிப்பு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3111/2023

கௌரவ சிவஞானம் ஶ்ரீதரன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வேலணைத்துறையிலிருந்து புங்குடுதீவு, மடத்துவெளி வரையிலான பாலம் இலங்கையில் அமைந்துள்ள நீளமான பாலங்களில் ஒன்றென்பதையும்;

(ii) மேற்படி பாலத்தினூடாகப் பயணிப்பது அபாயகரமானது என்பதையும்;

(iii) இந்தப் பாலத்தின் மீது பல விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நீளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பாலத்தின் மீது விபத்துக்கள் இடம்பெறுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பாலம் இறுதியாக புனரமைக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iv) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(v) அதற்கான நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட மூலம் யாதௌன்பதையும்;

(vi) மேற்படி பாலம் பூரணமாக புனரமைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3178/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் இலங்கையில் காணப்பட்ட தேங்காயின் விலை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) உற்பத்திச் செலவுடன் ஒப்பிடுகையில் தேங்காயின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) தேங்காயின் விலையை உயர்ந்த மட்டத்தில் பேணிச் செல்வதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக உறப்பட்ட செலவு ஒவ்வொரு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி இறக்குமதி செய்த நாடுகள் மற்றும் இறக்குமதியாளர்களின் பெயர்கள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) இலங்கைக்கு தேங்காய் இறக்குமதி செய்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3236/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் பதுளை தர்மதூத வித்தியாலயத்தில் இடம்பெற்ற வாகனப் பேரணியின்போது கெப்ரக வாகனமொன்று கவிழ்ந்ததில் இடம்பெற்ற விபத்துக் காரணமாக உயிரிழந்த மற்றும் காயமடைந்த மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி விபத்துத் தொடர்பில் கல்வி அமைச்சினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி விசாரணையின் முடிவுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாடசாலைகளினால் வாகனப் பேரணிகள் நடாத்தப்படும்போது, பின்பற்றப்பட வேண்டிய அளவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அளவுகோல்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3410/2023

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றி, இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வுபெறச் செய்யப்பட்ட 18 ஊழியர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்ற பொது மனுக்கள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

(ii) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துமாறு 17/2005 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் மூலம் அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி 18 ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுவதற்கான சகல தகைமைகளையும் கொண்டுள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அப்போதைய தலைவரினால் அப்போதைய அமைச்சருக்கும் செயலாளருக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது என்பதையும்;

(iv) வெகுசன ஊடக அமைச்சின் அப்போதைய மேலதிகச் செயலாளரினால் மேற்குறிப்பிட்ட ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் செலுத்த வேண்டுமென ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு விதப்புரை செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்குறிப்பிட்ட 18 ஊழியர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3589/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வமைப்புகளை தடைசெய்வதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் யாவையென்பதையும்;

(iv) அவ்வமைப்புகளுள் இன்றளவில் தடை நீக்கப்பட்டுள்ள அமைப்புகள் யாவையென்பதையும்;

(v) தடை நீக்கப்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் யாவையென்பதையும்;

(vi) உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய அமைப்புகளுக்கும் நபர்களுக்கும் எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2024 சனவரி 12, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3360/2023

கௌரவ ஜயந்த சமரவீர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின், மாதம்பாகம பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அத்துரல வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்டிருந்த அத்துரல கனிஷ்ட வித்தியாலயத்தை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்தை அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட காணியின் முதல் உரிமையாளரின் பெயர், நில அளவைப் படத்தின் இலக்கம் மற்றும் பரப்பளவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வித்தியாலயத்தை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த காணியின் அளவு யாதென்பதையும்;

(iv) மேற்படி வித்தியாலயத்தை அமைப்பதற்காக குறித்த காணியை கையகப்படுத்திய ஆண்டு யாதென்பதையும்;

(v) இன்றளவில் மேற்படி காணியின் உரிமையைக் கொண்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3366/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக மரணித்தவர்கள் சார்பில் அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இத்தாக்குதல் காரணமாக பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அப்பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக அவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவொன்று செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) இத்தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச அனுசரணையில் வெளிநாட்டுச் சிகிச்சைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3425/2023

கௌரவ இம்தியாஸ் பாகீர் மாகார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் சாய்சாலைக்கு (கிளினிக்) நாளாந்தம் வருகை தருகின்ற நோயாளிகளுக்கு நிர்ணயிக்கப்படுகின்ற புற்றுநோய் ஒழிப்பு மருந்துகள் மேற்படி வைத்தியசாலையில் இல்லாமை காரணமாக நோயாளிகளுக்கு அவை வழங்கப்படுவதில்லை என்பதையும்;

(ii) மிகவும் அதிகமான விலையைக் கொண்ட மேற்படி மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு பொருளாதார பலம் இல்லாத இந்நோயாளிகள், புற்றுநோய் தீவிரமடைந்து உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சாய்சாலைக்கு நாளாந்தம் வருகை தருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் தற்போது பற்றாக்குறையாகவுள்ள மருந்து வகைகள் யாவை என்பதையும்;

(iii) மருந்துப் பற்றாக்குறையைத் தவிர்த்துக் கொண்டு, அத்தியாவசியமான புற்றுநோய் ஒழிப்பு மருந்துகளை, மேற்படி வைத்தியசாலைக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(iv) அவ்வேலைத்திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3483/2023

கௌரவ வேலு குமார்,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தான தோட்டக் காணிகளில் பாற்பண்ணைகளை நிறுவுவதற்கு 2021.09.06 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஆமெனில், இதற்கென “கலபொட” மற்றும் “மவுண்ட் ஜீன்” ஆகிய ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் காணிகளின் அளவு ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இக் காணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு கம்பெனியினதும் பெயர், அக்கம்பெனிகளின் பணிபாளர்களின் பெயர்கள், அவர்களின் தேசியம் (உள்நாட்டவரா/வெளிநாட்டவரா) என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பெனியினால் செலுத்தப்படும் முற்பணத் தொகை மற்றும் ஒரு ஏக்கருக்கான வருடாந்த குத்தகைத் தொகை என்பன வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தோட்டங்களில் பாற்பண்ணைக்காக ஒதுக்கப்படும் நிலப்பரப்பில் அமைந்துள்ள லயன் வீடுகளினதும் வணக்கஸ்தலங்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்,

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தோட்டங்கள் அமைந்துள்ள மாவட்டங்களில் உள்ள அரச பாற்பண்ணைகளிடம் போதியளவு காணிகள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி தோட்டக் காணிகளை பாற்பண்ணைகளுக்காக வழங்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்;

(iii) அப் பாற்பண்ணைகளை நிறுவுவதற்காக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

அவர் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3753/2023

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகிய ஒவ்வொரு நிறுவனமும் இலங்கையில் மருந்து வழங்குநர்களுக்குச் செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகையானது, 60 நாட்களுக்கு மேற்பட்ட, 90 நாட்களுக்கு மேற்பட்ட, 120 நாட்களுக்கு மேற்பட்ட, 180 நாட்களுக்கு மேற்பட்ட மற்றும் 360 நாட்களுக்கு மேற்பட்ட என்ற கால வகைப்படுத்தலின் அடிப்படையிலும்;

(ii) இலங்கையில் மருந்து உற்பத்தியாளர்களுக்குச் செலுத்தவேண்டியுள்ள நிலுவைத் தொகையானது, 60 நாட்களுக்கு மேற்பட்ட, 90 நாட்களுக்கு மேற்பட்ட, 120 நாட்களுக்கு மேற்பட்ட மற்றும் 180 நாட்களுக்கு மேற்பட்ட என்ற கால வகைப்படுத்தலின் அடிப்படையிலும்;

வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இந்திய கடனுதவிக் கட்டளையின் மீது மருந்துகளை வழங்கிய வழங்குநர் களுக்குச் செலுத்தவேண்டியுள்ள நிலுவைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் இதுவரை சுகாதார அமைச்சு, மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகியன மருந்து வழங்குநர்கள் மற்றும் மருந்து உற்பத்தியாளர்களுக்குச் செலுத்தியுள்ள தொகை ஒவ்வொரு நிறுவனத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3515/2023

கௌரவ அசங்க நவரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் இன்றளவில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதிக்கான பதவிகளில் இன்றளவில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(iii) 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விடுமுறைகளைப் பெற்றுக் கொண்டுள்ள வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை;

(iv) மேற்படி காலப்பகுதியில் ஓய்வு பெற்றுள்ள வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3570/2023

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அரச ஊழியர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியம் செலுத்துவதை ஆரம்பிக்க சுமார் பத்து மாதங்களுக்கும் அதிகமான காலம் எடுக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இத்தாமதம் காரணமாக சில அரச ஊழியர்கள் தமது முதலாவது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு முன்னர் மரணிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தாமதமானது அவர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறித்த தாமதத்தைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தாமதத்தைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3645/2023

கௌரவ வடிவேல் சுரேஷ்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பதுளை டிப்போவினால் பதுளை நகரிலிருந்து தெமோதர ஊடாக வேவெல்ஹின்ன வரை; மடுல்சீமை - குருவிகொல்ல ஊடாக கொக்காகல வரை; லுணுகல ஊடாக பல்லேகிருவ வரை; தெமோதர ஊடாக ஓதும்ப வரை; ரொக்கதென்ன வரை மற்றும் ரொசட் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பஸ் வண்டிகள் உட்பட ஏனைய துணை வீதிகள் பலவற்றில் பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதன் காரணமாக தோட்டப்புற பிரதேசங்களில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக பதுளை நகருக்குச் செல்லும் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(ii) அச்சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3758/2023

கௌரவ விமலவீர திசாநாயக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக செலவு செய்யப்பட்ட தொகை;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வைச் சலுகையுடனான வாகன அனுமதிப் பத்திரங்களுக்குரிய தீர்வைச் சலுகையின் நிதி ரீதியான பெறுமதி;

ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3775/2023

கௌரவ கெவிந்து குமாரதுங்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் —

(i) ஊழியர் சேமலாப நிதியம் அதன் நிதியை முதலீடு செய்வதன் மூலம் ஈட்டியுள்ள மொத்த நிதித் தொகை;

(ii) நிதியத்தின் மொத்த வைப்புகளின் பெறுமதி;

(iii) அதன் நிதியை முதலீடு செய்வதன் மூலம் ஈட்டிய மொத்த நிதித் தொகையானது நிதியத்தின் மொத்த வைப்புக்களின் பெறுமதியின் சதவீதமாக;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் —

(i) ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை;

(ii) செயற்படுநிலையிலுள்ள பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்குறிப்பிட்ட செயற்படுநிலையிலுள்ள பங்களிப்பாளர்களினுடைய கணக்கு மீதிகளின் மொத்த பெறுமதி;

(iv) அதன் நிதியை முதலீடு செய்வதன் மூலம் ஈட்டியுள்ள மொத்த நிதியானது செயற்படுநிலையிலுள்ள பங்களிப்பாளர்களின் கணக்குகளில் உள்ள மீதிகளின் மொத்த பெறுமதியின் சதவீதமாக;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?